# சர்வதேச மனித உரிமைகள் தினம்

கோவில்பட்டி, டிச. 10: தூத்துக்குடி அன்னம்மாள் மகளிர் கல்வியியல் கல்லூரியில் சர்வதேச மனித உரிமைகள் தினம் திங்கள்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

இக்கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் உதவி மையம் ஆகியவை இணைந்து நடத்திய இவ்விழாவில், மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் இணை இயக்குநர் மோகன், தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் உதவி மைய ஒருங்கிணைப்பாளர் காசிராஜன் ஆகியோர் பேசினார். கல்லூரியின் செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலர் சுதாகுமாரி வரவேற்றார். இளைஞர் செஞ்சிலுவைச் சங்க மாணவிகள் பிரதிநிதி அகிலா நன்றி கூறினார்.

தினமணி
Tue, 11 Decemb
epaper.dinaman